24 பெப்ரவரி 2019

Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 7ம் ஞாயிறு

தி ரு மு ழு க் கு ப் பெ ற் று அ னு ப் ப ப டு த ல்

மாதாந்திர கருப்பொருள்:

**புனிதத்திற்கு அழைத்தல்**

# கோபத்திற்குப் பதில் செபம்



பகைவரையும் அன்பு செய்ய வேண்டும் என்பது இயேசுவின் கட்டளை, அது பரிந்துரை அல்ல. இந்த கட்டளையை வாழ்ந்து காட்ட நாம் எண்ணா விட்டால், இயேசுவின் உண்மையான சீடர்களாக இருப்பது கடினம்.

> **கிறிஸ்துவோடு நடப்பவர்களே பெரும் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டி வருகிறது என்பதை நாம் அறிகிறோம்.**
>
> - புனித அவிலா திரேசா

எத்தனை முறை மற்றவரை ஏளனமாக எண்ணியுள்ளோம். அற்ப காரணத்திற்காக ஆத்திரம் கொண்டு, ஆவேசமாக நடந்துள்ளோம். தவறான உள்நோக்கத்தோடு மனதைப் புண்படுத்தி பேசியுள்ளோம். காலப்போக்கில் இவையனைத்தும் வருத்தத்தைக் கொண்டு வரும். இவற்றையெல்லாம் மன்னித்து மறக்கும் பக்குவத்தை நம்மில் சிலர் பெற்றுள்ளோம். ஆனால் சிலரோ, அதனை மனதில் வைத்துக் கொண்டு வஞ்சம் தீர்த்து விடுகின்றனர். இம்மாதிரியான போக்கை அல்லது மனநிலையை நாம் அனுமதிக்கிறோமா? அல்லது அவற்றை ஒதுக்கி வைத்து விடுகிறோமா? மனதில் வஞ்சம் வைத்துக் கொண்டு வெளியுலகத்திற்கு நல்லவர்களைப் போல் நடிக்கிறோமா? இயேசுவும் நம்மைப் போல் மனிதனாக இருந்தார், அவருக்கும் இம்மாதிரியான சஞ்சலங்கள், சங்கடங்கள் இருந்தன. யெருசலம் ஆலயச் சம்பவத்தில் இதனை இயேசு வெளிபடுத்தினார்,

நமது இயல்பான நிலை, விண்ணக நிலைக்கு மாற வேண்டும் என்பதை புனித பவுல், அழகுற விளக்கிறார். ஆவேசம் கொள்ளும் நமது உணர்வை, கடவுள் விரும்பும் உணர்வாக மாற்றி, சினத்திலிருந்தும் மற்றவரை சீண்டுவதிலிருந்தும் விடுதலை பெற வேண்டும். மறு கன்னத்தைக் காட்டுவதும், அங்கியைக் கொடுப்பதும், உண்மை அன்புக்கு அழைத்து, செப வாழ்வில் நம் மனம் நிலைத்திருக்க விரும்புகிறார்,கடவுள். மாறாக பாவத்திலும் அவமானத்திலும் உழன்று கொண்டிருக்கல்ல.

வெறுப்புக்குப் பதில் செபிப்பது, குறிப்பாக சிரமத்தையும் சிக்கலையும் ஏற்படுத்தும் நமக்கு அனுக்கமானவர்களுக்காக செய்வது, நச்சுத்தன்மையிலிருந்து விலகி, சுத்தமான காற்றைச் சுவாசிக்க கடவுள் நமக்கு வழிவிடுவார். வாழ்க்கையின் சகப்பான நிகழ்வுகளை மறந்து கடவுள் பக்கம் திரும்பா விட்டால், ஒருவருக்கொருவர் தீர்ப்பிடுவது தொடரும். தந்தையாகிய கடவுள் வழங்கும் அருள், நம்மை விட்டு விலகிச் செல்லும். பரிவிரக்கமிக்க நமது தந்தையைப் போல் நாம் பரிவிரக்கமிக்க மக்களாக மாறினால் மட்டுமே கிறிஸ்து+அவன் என்று கூறிக் கொள்ள முடியும். இதனால் நமக்கு வலு ஊட்டும் **கிறிஸ்துவின் துணைகொண்டு எதையும் செய்ய நமக்கு ஆற்றல் உண்டு** (பிலி.4:13) என்ற திட்டத்தை அவர் செயல்படுத்த முடியும். ✝

**இன்றைய விவிலிய குறிப்பு:**

1 சாமுவேல்: 26: 2,7-9, 12-13, 22-23

திருப்பாடல்:103: 1-2, 3-4, 8,10, 12-13

1 கொரிந்தியர்: 15: 45-49

லூக்கா 6: 27-38

**வாரம் ஒரு வசனம்**

**கிறிஸ்துவின் துணைகொண்டு எதையும் செய்ய நமக்கு ஆற்றல் உண்டு.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 08/2019

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2019 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***திருமுழுக்கு அளித்து அனுப்புதல்***

*2019 மார்ச்சு (பங்குனி) மாதத்தின் கருப்பொருள்:*

***சிலுவையைச் சுமக்க பலப்படுத்துகிறது***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 7ஆம் ஞயிறு (ஆண்டு 3)** **சனி 23-02-2019 - ஞாயிறு 03-03-2019**
சாமு : 26: 2, 7-9, 12-13, 22-23 தி.பா: 103: 1-2, 3-4, 8, 10, 12-13 1 கொரி: 15: 45-49 லூக்கா : 6: 27-38
**"ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர் " - திபா 103**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 23 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித லியோ) | |
| ஞாயிறு | 24 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (குடும்ப வாழ்வு பணிக்குழு<br>திருப்பலி (ஆ) (புனித டெனிஸ்)<br>திருப்பலி (சீ)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பல (தே.மொழி)<br>மாலை 7.00 கம்.செபீர் (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |
| திங்கள் | 25 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 26 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 27 | 6.45 கா | திருப்பலி | *மாலை 8.00 மணிக்கு அதிச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் **(BECCOT)*** |
| வியா | 28 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (த) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| வெள் | 01 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) முதல் வெள்ளிக்கிழமை*** |

**பொதுக்காலம் 8ஆம் ஞரிறு (ஆண்டு 3)**
சீராக் : 27: 4-7 தி.பா: 92: 1-2, 12-13, 14-15 1 கொரி: 15: 54-58 லூக்கா : 6: 39-45
**" ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று " - திபா 92**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை / நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித அலோசியஸ்) | |
| ஞாயிறு | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (புனித ஹென்றி )<br>திருப்பலி (ஆ) (புனித பெனடிக்ட்)<br>திருப்பலி (சீ)<br>திருப்பல (தே.மொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம்) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## 2019 *மார்ச் (பங்குனி) மாத செய்திகள் / நிகழ்வுகள்*

1) **பங்கு காணிக்கை:**
அ) 16/17 பிப்ரவரி 2019 ரிம: 9,810.70
*இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**2) பங்கு மக்களுக்கு ஓர் நினைவூட்டல்:**
அ) திருப்பலியின் நற்கருணைப் பெற வரும்போது உங்கள் உடைமைகள் குறிப்பாக கைப்பைகள் கவனம். இருக்கைகளில் வைத்துவிட்டு வரவேண்டாம். கூடுதல் கவனத்தோடு இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். நன்றி.
ஆ) ஆலய வளாகம் / உணவு விடுதி சுற்றுப்புறத்தில் புகைப்பிடிக்க அனுமதி இல்லை.உங்களுடைய ஒத்துழைப்புக்கு நன்றி.

**3) காலை சிற்றுண்டி விற்பனை: பங்கு சமயங்கள்/கிறிஸ்துவ சபைகளுக்கிடையிலான பணிக்குழு**வினர் இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:24/2/2019. வாங்கி ஆதரவு த்ருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**4) நமது ஆலய உணவு விடுதி சுத்தத்தைப் பேணுதல் :** உணவுகளைப் பெறுவதற்கு வரிசையில் நிற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். குவளைகள் மற்றும் உணவுத்தட்டுகளை பயன்படுத்தியபின் அதற்குரிய இடத்தில் வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**5) துன் தான் செங் லோக் தாதியர் பயிற்சிக் கல்லூரி, அசுந்தா மருத்துவமனை** - முழு கல்வி உதவித்தொகை - 3 ஆண்டு முழு நேர டிப்ளமோ தாதியர் கல்வி - ஆர்வமுடையோர் www.assuntacollege.edu.my இந்த மின்னஞ்சல் அல்லது தொபேசி: 03-7872 3078 எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பதிவுகள் 15-04-2019 முதல் 01-07-2019 நடைபெறும்.

**6) UKM பல்கலைக் கழக மாணவர்கள்** 2 குழந்தைகளின் இருதய அருவை சிகிச்சைக்காக ( IJN ) நன்கொடை திரட்ட நம் ஆலயத்திற்கு வந்துள்ளார்கள். தாராள உள்ளத்தோடு அவர்களுக்கு ஆதரவு வழங்குங்கள்.

**மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்**
மோலி தான் சியோக் இம் இறப்பு: 18/02/19
**முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக**

**திருமண அருளடையாளக் கொண்டாட்டம் - வாழ்த்துகள்**
சு சே கியோங் & கேத்ரீன் லாம் - 02-03-2019 காலை 11.00

இன்று திருப்பலியை வழி நடத்திய குடும்ப வாழ்வுப் பணிக்குழுவினருக்கு நமது நன்றிகள்

- **தூதுரைப்பணி ஆண்டு:**
  - உங்களின் விண்மீனை மறந்துவிட வேண்டாம்
  - தனிப்பட்ட செபத்திற்கு நேரம் ஒதுக்குங்கள்
  - இந்த ஆண்டில் ஒரு உருவாக்கப் பயிற்சியிலாவது கலந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்
  - நம்பிக்கைக்கு சாட்சி பகரும் வகையில் ஒரு புனிதர் அல்லது விசுவாசமிக்க ஒரு நபரைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்
  - தர்மகாரியம்/இரக்க செயலில் ஈடுபடுங்கள்
  - நீலாய், புனித திரேசா ஆலயத்திற்கு புனித யாத்திரை செல்லுங்கள் (கூடுதல் விவரங்கள் விரைவில்)
- **சீனப்புத்தாண்டு விருந்து 03-03-2018** இடம்: ரீஜெண்ட் உணவு விடுதி, சிரம்பான். ஒரு மேசை அல்லது ஒரு நபருக்கான டிக்கெட் வாங்கி இதில் கலந்துகொள்ளுங்கள். தொடர்புக்கு: பமேலா 016-630 6169
- **ஒளி/ஒலி கருவிகள் - பாடல் குழுவினரின் மேல் அறை**: இங்கிருக்கும் கருவிகளை திருப்பலி நேரத்தில் கையாளும்போது கூடுதல் கவனத்தோடு பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். பழுது ஏதேனும் ஏற்பட்டால் தயவு செய்து பங்கு அலுவலகத்தில் தெரியப்படுத்தவும்.
- **சமயங்களுக்கிடையிலான உரையாடல் பணிக்குழுவினரின் கோல்ஃப் விளையாட்டுப் போட்டி**
  நெகிரி செம்பிலான் பணிக்குழுவினர் இதை ஏற்பாடு செய்கின்றனர். நாள்:06-04-2019 காலை 7.00 மணி. சிரம்பான் இண்டர்னேஷனல் கோல்ஃப் கிளப் (SIGC). நபர் ஒருவருக்கு கட்டணம் ரிம:250/- (காலை உணவு/பகல் உணவு/பரிசுப்பை உள்ளடக்கியது.) மற்றும் கண்கவர் பரிசுகள். கோல்ஃப் விளையாடும் அனைவரையும் இதில் கலந்து ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். தொடர்புக்கு: தயாளன் (017- 8809 454) கிறிஸ்டோபர் கே (019-6216 194)
- **நீலாய், புனித திரேசா ஆலயம்- 2019 தூதுரைப்பணி ஆண்டில் அதிகாரப்பூர்வ தூதுரை ஆலயம்**
  புனித திரேசா தூதுரைப்பணியின் பாதுகாவலி. இந்த ஆலயத்திற்கு திருயாத்திரை மேற்கொண்டு, திருப்பலியில் கலந்து, செபித்து, தூதுரைப்பணியில் நாமும் பங்குகொள்வோம்.
- **மருத்துவமனை மற்றும் வீடுகளில் இருக்கும் நோயாளிகளின் குடும்பத்தினரின் கவனத்திற்கு:**
  தயவு செய்து பங்கு அலுவலகத்தில் தெரிவிக்கவும். கூடியமட்டும் குருவானவர்கள் வந்து சந்திப்பார்கள்.
- **நற்கருணைப் பணியாளர்கள் மற்றும் சிறப்புப் பணியில் உள்ளவர்களின் கவனத்திற்கு:**
  உங்கள் சோன்/அதிச வில் உள்ள நோயாளிகளுக்கு ஒவ்வொரு வாரமும் நற்கருணை வழங்குவதில் முக்கிய அக்கறைக் காட்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **திருப்பலிக்கு முறையாக உடை அணிந்து வருக!:** பங்கு மக்கள், பொறுப்பாளர்கள், திருப்பலியில் பணி செய்வோர் அனைவரும் நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு முறையாக உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம். அரைக்கால் சட்டை/உடல் தெரியும் ஆடைகள், பனியன், ஜப்பான் மிதியடி ஆகியவற்றை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்களுடைய சிறந்த ஆடையை அணிந்து வந்து திருப்பலிக்கு உரிய மரியாதையை வழங்குங்கள்.

- **அருட்பணி: சேவியர் அவர்களோடு தேனீர் உரையாடல்:** (நெகிரி மாநில பேரணியை முன்னிட்டு) நாள்:24/2 (ஞாயிறு ) மாலை 6.10 வரை; மினவுதல் தேவாலய தூதுரை இல்லம்: வயது 18-39 வரை. தொடர்புக்கு: சப்ரீனா (013-2887624)
- **பிப்ரவரி 26 முதல் மார்ச்சு 01 வரை :** பங்குத் தந்தை மறைதிரு ஜோர்ஜ் ஹரிசன் அவர்கள் விடுமுறையில் செல்லவுள்ளார்
- **திரு நீற்றுப்புதன் திருப்பலி அட்டவணை: 06-03-2019**
  காலை 6.45 ஆங்கிலம் மாலை 6.00 நான்கு மொழி திருப்பலி
  மாலை 8.00 தமிழ் மாலை 4.30 தித்தி (சீனம்)
- ***2019 தவக்காலக் கருப்பொருள்.*** இந்த தவக்காலத்தில் நாம் "லாவ்டா தோ சி - நம் அன்னை பூமியான இயற்கையைப் பாதுகாப்போம் என்ற கருப்பொருளையொட்டி தியானித்து செயல்படுவோம்.